# மூதூர் பிரதேச சபை
# திருகோணமலை மாவட்டம்

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2013 மார்ச் 28 ஆந் திகதி கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2012 பெப்ரவரி 27 ஆந் திகதி கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2013 ஒக்டோபர் 30 ஆந் திகதி சபைத் தலைவருக்கு வழங்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

எனது பரிசோதனைகளிலிருந்து தென்படுவதும் எனக்கு வழங்கப்பட்ட சிறந்த தகவல்கள் மற்றும் விளக்கங்களுக்கமைய, மூதூர் பிரதேச சபை 2012 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான முறையான கணக்குப் பதிவேடுகளை பேணியிருந்தது என்றும், எனது அறிக்கையில் காட்டப்பட்டுள்ள விடயங்களால் நிதிக்கூற்றுக்களுக்கு ஏற்படும் தாக்கங்களை தவிர, 2012 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான மூதூர் பிரதேச சபையின் நிலைவரத்தையும், அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்பாட்டு நிதி விளைவுகளையும் காசோட்டத்தையும் உண்மையாகவும், நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தும் விதத்தில் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டிருந்தன என நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

சபையானது 2012 ஆம் ஆண்டில் வருமானம் உழைப்பதற்கும் சேவையை வழங்குவதற்கும் ரூபா 29,146,308 தொகையான நிலையான சொத்துக்களை பயன்படுத்தி இருந்த போதும் அவற்றிற்கான பெறுமானத்தேய்வு கணக்குகளுக்கு கொண்டுவரப்படாமையால் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட இலாபம் சபையினது உண்மையான இலாபத்தினை வெளிப்படுத்தியிருக்கவில்லை.

#### 1.3.2 கணக்கீட்டு குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டு குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) நூலகப் புத்தகத்தின் பெறுமதியாகிய ரூபா 62,400 கணக்குகளுக்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டிற்கான ரூபா 17,615 தொகையான கணக்காய்வுக் கட்டணத்திற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்ட கடன் தொகையானது கணக்குகளில் ரூபா 28,809 இனால் குறைத்து பதியப்பட்டிருந்தது.

(ஈ) 2012 ஆம் ஆண்டு கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 74,880 தொகையான மூலதனப் பொருட்கள் வருமானச் செலவாக பதியப்பட்டிருந்தன.

1.3.3 **<u>பெறப்பட வேண்டிய மற்றும் செலுத்தப்பட வேண்டிய கணக்குகள்</u>**

(அ) செயற்படாத 1997 ஆம் ஆண்டுக்கான தொலைபேசிக் கட்டணமாகிய ரூபா 23,806 வைப்புக் கணக்கில் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) 1986 ஆம் ஆண்டு தொடக்கம் ஊழியர்களிடமிருந்து அறவிடப்பட்ட ரூபா 35,609,022 தொகையான ஊழியர் சேமலாப நிதிய, விதவைகள் அநாதைகள் ஓய்வூதிய நிதிய பங்களிப்புக்கள் உரிய நிறுவனங்களுக்கு அனுப்பப்படாமல் வைப்புக் கணக்கில் இருந்தன.

(இ) 2003 தொடக்கம் ஒப்பந்தகாரர்களிடமிருந்து பிடித்து வைத்த ரூபா 615,702 பணத்தை செலுத்துவதற்கு அல்லது வருமான கணக்கிற்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஈ) 2000 ஒக்டோபர் 31 ஆந் திகதி கமநல சேவை ஆணையாளருக்கு செலுத்த வேண்டிய ரூபா 26,115 செலுத்தப்படாமல் பத்து வருடங்களுக்கு மேலாக வைப்புக் கணக்கில் இடப்பட்டுள்ளது.

(உ) 2004 ஜனவரி 22 ஆந் திகதியிலிருந்து சபை ஊழியர்களின் சம்பளத்திலிருந்து அறவிடப்பட்ட ஓய்வூதியப் பங்களிப்பாகிய ரூபா 3,891 தொகையானது ஓய்வூதியத் திணைக்களத்திற்கு அனுப்பப்படாது நானாவித வைப்புக் கணக்கில் இடப்பட்டுள்ளது.

1.3.4 **<u>கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை</u>**

பின்வரும் ஒவ்வொரு விடயத்திற்கும் எதிரே சுட்டிக்காட்டப்பட்டுள்ள சான்றுகள் இன்மையால் அவ்விடயங்களை கணக்காய்வில் திருப்திகரமாக மெய்மையாய்வு செய்ய முடியாதுள்ளது.

| விடயம் | தொகை ரூபா | சமர்ப்பிக்கப்படாத சான்று |
|---|---|---|
| காணி கட்டிடம் | 4,443,627 | நிலையான சொத்துப் பதிவேடு, வரைபடம், உரித்துறுதி |
| பொறி, இயந்திரம் | 618,617 | நிலையான சொத்துப் பதிவேடு, மென்மையாய்வுச் சபை அறிக்கை |
| மோட்டார் வாகனம் | 23,026,590 | |
| அரசிறை பேரிலான வைப்பு | 16,607,885 | காலப் பகுப்பாய்வு |
| கேள்வி வைப்பு | 2,328,850 | |
| ஒப்பந்ததாரர் வைப்பு | 67,845 | |
| நானாவித வைப்பு | 287,280 | |
| மின்சார வைப்பு | 1,598,625 | விபரப் பட்டியல் |
| முற்பணக் கொடுப்பனவு | 3,832,978 | |
| பாதுகாப்பு வைப்பு | 6,858,099 | |

1.3.5 **தொங்கல் கணக்கு**

தொங்கல் கணக்கு செலவு மீதியான ரூபா 16,574 தொகையை 2000 ஆம் ஆண்டு தொடக்கம் இன்றுவரை தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்தது.

1.3.6 **சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காமை**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|
| (அ) **1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டம்** | |
| (i) பகுதி II பிரிவு 158 | சபையின் எல்லைக்குட்பட்ட சகல வட்டாரங்களினதும் ஆதனவரி அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (ii) பகுதி II பிரிவு (4) | ஆதனவரி அறிவித்தல் கடிதங்கள் ஒவ்வோர் ஆண்டும் டிசம்பர் மாதம் 31 ஆந் திகதிக்கு முன்னர் வரியிறுப்பாளர்களுக்கு வழங்கப்பட வேண்டுமென கூறப்பட்டபோதும் கடிதங்கள் வழங்கப் பட்டிருக்கவில்லை. |
| (ஆ) **பிரதேச சபை நிதி நிர்வாக ஒழுங்குவிதி 1989** | |
| (i) அத்தியாயம் VII பிரிவு 140 | மூன்று வருடங்களுக்கு முன்னர் முற்பணமாக வழங்கப்பட்ட ரூபா 3,832,977 தொகை இது வரை அறவிடப்பட்டிருக்கவில்லை. |
| (ii) அத்தியாயம் VII பிரிவு 152 | வரவுகள் பற்றிய மாதாந்த கூற்று நாள்தோறும் சமப்படுத்தப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (iii) | அத்தியாயம் VII பிரிவு 153 | அரசிறை நிலுவைகளின் மாதாந்தக் கூற்று சமப்படுத்தப்பட்டிருக்கவில்லை. |
| (iv) | அத்தியாயம் VII பிரிவு 154 | உப அலுவலகங்களின் சேகரிப்புக் கணக்கு சமப்படுத்தப்பட்டிருக்கவில்லை. |
| (v) | அத்தியாயம் VII பிரிவு 164 | செயலாளர் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட ஓர் உத்தியோகத்தர் கணக்கீட்டு ஆவணங்களை நாள்தோறும் செவ்வை பார்த்து அவற்றில் முதலெழுத்து ஒப்பமிட்டிருக்கவில்லை. |
| (vi) | அத்தியாயம் IX நானாவிதம் 181 – 184 | காசு மற்றும் களஞ்சியப் பொருட்கள் நிர்வாக ரீதியாக ஒப்படைக்கப்பட்ட உத்தியோகத்தர்களிடமிருந்து பிணை வைப்பு பெற்றுக்கொள்ளப்படவில்லை |

(இ) **<u>நிதி ஒழுங்குவிதி</u>**

| | | |
|---|---|---|
| (i) | இலக்கம் 396 | 2012 ஆம் ஆண்டு வழங்கப்பட்டு ஆறு மாதங்களுக்கு மேல் மாற்றப்படாதிருந்த ரூபா 376,578 பெறுமதியான 53 காசோலைகளை மாற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | இலக்கம் 571 (2) | கடந்த முப்பது வருட காலமாக ரூபா 3,742,088 தொகையானது காலம் கடந்த வைப்பாக காட்டப்பட்டிருந்தது. இவை தொடர்பில் 2012 டிசெம்பர் 31 ஆந் திகதி வரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |

(ஈ) **<u>மாகாண நிதி ஒழுங்குவிதி</u>**

| | | |
|---|---|---|
| (i) | இலக்கம் 751 | 2012 ஆம் ஆண்டு கொள்வனவு செய்யப்பட்ட பொருட்களின் பெறுமதியாகிய ரூபா 883,480 இருப்பு பதிவேட்டில் பதியப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | இலக்கம் 432 | 2012 ஆம் ஆண்டு சபையின் வாகனங்களின் நாளாந்த வாகன ஓட்ட அட்டவணைகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதிசார் மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிசார் கூற்றுக்களின்படி 2012 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான பிரதேச சபையின் வருமானத்திலும் கூடிய மீண்டுவரும் செலவினம் ரூபா 27,575,995 ஆகும். இதற்கெதிரான முந்திய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்திற்கு கூடிய வருமான மிகை ரூபா 7,203,924 ஆகும்.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளவாறான வருமானம், வருமான நிலுவை என்பன

சபையினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம், வருமான நிலுவை என்பனவற்றின் தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| | வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளவாறான | டிசம்பர் 31ல் உள்ளவாறான திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 |
| (i) | வீதவரிகளும் வரிகளும் | 4,456 | 226 | 4,230 |
| (ii) | குத்தகை வாடகை | 14,005 | 2,801 | 11,499 |
| (iii) | அனுமதிப்பத்திர கட்டணம் | 564 | 472 | 91 |
| (iv) | ஏனைய வருமானம் | 9 | 1 | 8 |

### 2.3 அங்கீகாரமற்ற சம்பளக் கொடுப்பனவு

ஆட்சேர்ப்பு நடைமுறைகளைப் பின்பற்றாமலும் உள்ளூராட்சி ஆணையாளரின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளாமலும் 30 தொழிலாளர்கள் நியமிக்கப்பட்டு 2012 ஆம் ஆண்டு பிரதேச சபையின் நிதியிலிருந்து ரூபா. 6,415,310 சம்பளமாக வழங்கப்பட்டுள்ளது.

### 2.4 மனிதவள முகாமைத்துவம்

சபையின் 2012 டிசம்பர் 31 இல் உள்ளவாறான அனுமதிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான ஆளணியின் விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| பதவிகளின் வகை | அனுமதிக்கப்பட்ட ஆளணி | உள்ளவாறான ஆளணி | குறைவு / மேலதிகம் |
|---|---|---|---|
| பதவிநிலைத் தரங்கள் | 16 | 13 | 3 |
| துணைத் தரங்கள் | 14 | 8 | 6 |
| சிற்றூழியர்கள் | 51 | 43 | 8 |
| ஏனையோர் (அமைய /தற்காலிகம்) | -- | 32 | (32) |
| | **81** | **96** | |

2.5 **ஒப்பந்த முகாமைத்துவத்தில் உள்ள குறைபாடுகள்**

(அ) மதிப்பீடுகளைத் தயாரிக்கும்போது தொடர் இலக்கம் இடப்பட்டு பதிவேட்டில் பதியப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ஒப்பந்த வேலைச் செலவினம் ரூபா. 100,000க்கு மேற்படுமிடத்து பிரதேச சபை நிதி நிர்வாக ஒழுங்கு விதி அத்தியாயம் VIII 178(5) பிரிவுக்கு அமைய பகிரங்க கேள்வி பெறப்பட்டிருக்கவில்லை.

(இ) ஒப்பந்தகாரர்களிடமிருந்து வங்கி உத்தரவாதச் சான்றிதழ் பெறப்பட்டிருக்கவில்லை.

(ஈ) அங்கீகரித்த சங்கங்களிடம் ஒப்பந்த வேலைகளை வழங்கும்போது இலங்கை அரசாங்கத்தின் பெறுகை வழிகாட்டி பிரிவு 3.9.1 படி ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

கீழ்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு விடயங்கள் தொடர்பாக சபையின் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) பாதீடு
(ஆ) கணக்கீடு
(இ) நிலையான சொத்துக்கள்
(ஈ) இருப்புகள்
(உ) முற்பணங்கள்
(ஊ) வரி சேகரிப்பு